**STARTING TIME 11.53 A.M**

**IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.**

**O.S. No. 29/2019**

Deposition of **P.W.1** witnesses for Plaintiff Solemnly affirmed by Tr. S. Gopi, Grade-II Bench Clerk of this court, on 10.04.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : தனலட்சுமி Husband's Name : பாபு

Address : எண்.32, காகிதபட்டரை, மாரியம்மன் கோவில் தெரு, வேலூர்.

Age : 43

**2–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கை நான் 2015–ம் ஆண்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். நான் தாக்கல் செய்த தாவாவில், பத்தி 4–ல் நானும், எனது தாயாரும், சகோதர, சகோதரி ஆகிய 4 பேரும் சேர்ந்து தான் பொன்னுசாமி என்பவருக்கும் கிரையம் செய்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால், நான் அதுபோல் சொல்லவில்லை, ஆனால் அவ்வாறு தாவாவில் சொல்லப்பட்டுவிட்டது.

2. பொன்னுசாமிக்கு கிரையம் செய்தோம் என்ற விவரம் வழக்கு தாக்கல் செய்த எனது வழக்கறிஞருக்கு எப்படி தெரியும் என்றால், நான் சொல்லி தான் தெரியும். நான் இவ்வழக்கில் எனது முதல் விசாரணை சாட்சியத்தை 2019–ம் ஆண்டு கொடுத்துள்ளேன் என்றால், சரிதான். அந்த முதல் விசாரணை வாக்குமூலத்தின் 3–வது பத்தியிலும், நானும், 1, 2 பிரதிவாதிகளும் கிராம நத்தம் மனையை 2–ம் பிரதிவாதியின் திருமணத்திற்கு ஒன்று சேர்ந்து விற்றுவிட்டோம்

என சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். அதுபோல் பொன்னுசாமிக்கு விற்பனை செய்த கிரையப் பத்திரத்தின் சான்று நகல் என சொல்லி வா.சா.ஆ.17 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான்.

3. தாவா தாக்கல் செய்த போதே பொன்னுசாமிக்கு செய்த கிரையம் குறித்து எனக்கு தெரிய வந்ததால் தான் அந்த விவரத்தை வழக்கறிஞரிடம் சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். எனவே, என்னுடைய சம்மதத்தின் பேரில் தான் வா.சா.ஆ.17 கிரையப் பத்திரம் எழுதிக் கொடுக்கப்பட்டது என்றால், சரியல்ல, கிரையம் செய்த போது அக்கிரையம் பற்றி எனக்கோ, 1–ம் பிரதிவாதிக்கோ தெரியாது.

4. வ.சா.ஆ.17 கிரையத்தின் போது எனக்கு என்ன வயது என்றால், 9 வயதாகும். என்ன காரணத்திற்காக வா.சா.ஆ.17 கிரையப் பத்திரம் எழுதிக் கொடுக்கப்பட்டது என்றால், 2–ம் பிரதிவாதியின் திருமண செலவிற்காக வேண்டி எழுதி கொடுக்கப்பட்டது. அந்த கிரையம் குறித்து எனக்கு தெரிந்த காரணத்தினால் தான் எனக்கு வழக்குரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேன் என்றால், சரியல்ல.

5. எனது தகப்பனாரின் காலத்திற்கு பிறகு எனது குடும்பத்தில் யார் மூத்தவர் என்றால், எனது தாயார் ஆவார். அந்த காரணத்தினால் தான் வா.சா.ஆ.17 கிரையப் பத்திரத்தை எனது தாயார் மட்டும் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால், அக்கிரையம் பற்றி அப்போது எங்களுக்கு தெரியாது.

6. வா.சா.ஆ.17 ஆவணத்தை எப்போது வாங்கினேன் என்றால், தற்போது நினைவில் இல்லை. அந்த ஆவணத்தை 15.11.2024 அன்று வாங்கியதாக உள்ளது என்றால், சரிதான். அந்த சமயத்தில் இவ்வழக்கு விசாரணையில் தான் இருந்து வந்தது என்றால், சரிதான். வழக்கு விசாரணை எவ்வாறு செல்கிறது என்பதை பார்த்திருந்து வழக்கில் இருதரப்பு சாட்சியம் முடிந்து தற்போது வழக்கு

வாதத்திற்காக வந்த போது வா.சா.ஆ.17 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

7. வா.சா.ஆ.17 ஆவணத்தில் உள்ள சொத்தானது, எனது தாத்தா எனது அம்மா பெயரில் 01.09.1971 அன்று எழுதி வைத்த வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் பத்திரத்தின்படி பாத்தியப்பட்டது என்றால், சரிதான். வா.சா.ஆ.17 ஆவணத்தில் உள்ள சொத்தை இவ்வழக்கின் சொத்து விவரத்தில் சேர்த்துள்ளேனா என்றால், இல்லை. வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் பத்திரத்தில் உள்ள சொத்தை எனது தாயார் கிரையம் செய்யக்கூடாது என்ற நிபந்தனையுடன் உள்ளது என்றால், சரிதான்.

8. 01.09.1971 அன்று எழுதி வைத்த வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் பத்திரத்தில் உள்ள சொத்துக்கள் தான் இவ்வழக்கு சொத்துக்கள் என்றால், சரிதான். பொன்னுசாமிக்கு விற்பனை செய்த வா.சா.ஆ.17–ல் உள்ள சொத்து விற்பனை செய்யக் கூடாது என்ற நிபந்தனையை மீறி விற்பனை செய்யப்பட்டுள்ளது என்றால், அந்தக் கிரையம் பற்றி அப்போது எனக்கு எதுவும் தெரியாது. வா.சா.ஆ.17 கிரையம் செல்லாது என்ற பரிகாரத்தை இவ்வழக்கிலோ அல்லது வேறு வழக்கிலோ கேட்டுள்ளேனா என்றால், அது பற்றி எனக்கு தெரியவில்லை. அது பற்றி எனக்கு தெரியவில்லை என சொல்வது தவறு என்றும், வா.சா.ஆ.17 கிரையம் குறித்து எனக்கு நன்கு தெரிந்தும் அக்கிரையம் செல்லாது என இதுநாள்வரை எந்தப் பரிகாரத்தையும் கேட்கவில்லை என்றால், அது பற்றி தெரியவில்லை.

9. நானும், எனது தாயாரும், 1, 2 பிரதிவாதிகளும் வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் பத்திரத்தில் உள்ள நிபந்தனைகளை தளர்த்துக் கொண்டதால் தான் வா.சா.ஆ.17 கிரையப் பத்திரத்தை எனது தாயார் எழுதிக் கொடுத்துள்ளார் என்றும், அந்த வகையில் எனது தாயார், 2–ம் பிரதிவாதி பெயருக்கு எழுதிக் கொடுத்த

செட்டில்மெண்ட் பத்திரம் எனது சம்மதத்தின் பேரிலேயே எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது என்றும், எனவே, நான் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கே நிலைக்கதக்கதல்ல என்றால், சரியல்ல. எனவே, 2–ம் பிரதிவாதி பெயரில் எழுதி வைத்த செட்டில்மெண்ட் பத்திரம் செல்லாது என கேட்க எனக்கு முரண்தடை ஏற்பட்டுள்ளது என்றால், சரியல்ல. எனவே, தாவாவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால், சரியல்ல.

2–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

**3, 5, 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

10. வா.சா.ஆ.17 ஆவணம் குறித்து எப்போது தெரிய வந்தது என்றால், இவ்வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு தான் தெரிய வந்தது. குறிப்பிட்டு எந்த வருடத்தில் தெரிய வந்தது என்றால், அது பற்றி நினைவில் இல்லை. வா.சா.ஆ.17 ஆவணத்தில் உள்ள சொத்தை இவ்வழக்கு சொத்தாக சேர்க்க நடவடிக்கை எடுத்தேனா என்றால், இல்லை. இவ்வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பே வா.சா.ஆ.17 ஆவணம் பற்றி எனக்கு தெரியும் என்றும், வழக்கிற்காக வேண்டியே வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் அந்தக் கிரையம் பற்றி தெரியும் என சொல்கிறேன் என்றால், சரியல்ல. வா.சா.ஆ.17–ல் உள்ள சொத்திற்கும், 3, 5, 7 பிரதிவாதிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால், சரியல்ல.

3,5,7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதி தரப்பில் மறு விசாரணை இல்லை.

**ENDING TIME: 12.26. P.M.**

Special Subordinate Judge

YUVARAJ

Digitally signed by YUVARAJ
Location: Arakkonam
Date: 2026.04.10 16:13:28 +0530